பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 09 2025 7.15
புதன்கிழமை இரவு
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- செமி கண்டெக்டர் துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- ஆயுஷ் தின கொண்டாட்டங்களில் மாநில அரசுகள் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- சத்தீஷ்கரில் 20 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

- இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள ஆவலுடன் உள்ளதாக ஜெர்மனி கூறியுள்ளது.

- Almaty சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Swastika Ghosh பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்-

செமி கண்டெக்டர் துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

செமி கண்டெக்டர் உற்பத்தி முனையமாக இந்தியா உருவெடுப்பதற்கான வாய்ப்புகள் குறித்து அமைச்சர் இந்த கட்டுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளதாக திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><<

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் இரண்டு நாள் கூட்டம் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் இரண்டடுக்கு வரி விகிதங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, இக்கூட்டத்தில் பங்கேற்ற ஆந்திர நிதியமைச்சர் திரு Payyavula Keshav செய்தியாளர்களிடம் பேசுகையில் மத்திய அரசு பரிந்துரைத்துள்ள சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு தெலுங்கு தேசம் முழு ஆதரவு அளிக்கும் என்றார்.

இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மக்களுக்கு பயனளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் திரு Payyavula Keshav கூறினார்.

>><><><><<

*நாடுமுழுவதும் நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.*

*இன்று புதுதில்லியில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.*

*நகரின் மையப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஏதுவாக சுற்றுச்சாலைகளை ஏற்படுத்துவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.*

*சாலைப் பணிகளில் புதுமை தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.*

*>><><><><<*

*ஆயுஷ் தின கொண்டாட்டங்களில் மாநில அரசுகள் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் தேசிய ஆயுஷ் இயக்கத்தின் கீழ் நடைபெற்ற உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*ஆயுர்வேத தினம் வரும் 23 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*சிகிச்சைக்கு பதிலாக நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தற்போது கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.*

*>><><><><<*

*மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தலைமையில் உயர்நிலைக் குழு கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.*

*அறிவியல் துறை செயலர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் சர்வதேச அறிவியல் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.*

*அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான செயல்பாடுகள் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.*

*அறிவியல் துறையில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்குமாறு அமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் வகையில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் இந்த கூட்டத்தில் வலியுறுத்தினார்.*

*>><><><><<*

*ராஜஸ்தான் சட்டப்பேரவையில் பயிற்சி மையங்களை ஒழுங்குப்படுத்துவதற்கு வகை செய்யும் மசோதா இன்று நிறைவேறியது.*

*மாணவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் பயிற்சி மையங்களின் உரிமத்தை ரத்து செய்வதற்கு வகை செய்வதற்கான அம்சம் இதில் இடம்பெற்றுள்ளது.*

*இதேபோல, விதிகளை மீறி செயல்படும் பயிற்சி மையங்களுக்கு 50 ஆயிரம் முதல் 2 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.*

*>><><><><<*

*சத்தீஷ்கரில் 20 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.*

*சுக்மா மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மத்திய ரிசர்வ் காவல்படையின் துணை தலைமை இயக்குநர் திரு ராஜேஷ்குமார் பாண்டே முன்னிலையில் இவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*சரணடைந்த நக்ஸலைட்டுகளில் 9 பேர் பெண்கள் என்று அவர் மேலும் கூறுகிறார்.*

*பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் தொடர்புடைய இந்த நக்ஸலைட்டுகளை பிடிப்பதற்காக 33 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்த நிலையில் இவர்கள் சரணடைந்துள்ளனர்.*

*>><><><><<*

*இந்தியா – ஜெர்மனி வெளியுறவு அமைச்சர்கள் இடையேயான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.*

*இதன் பின்னர் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் மற்றும் ஜெர்மன் வெளியுறவு அமைச்சர் திரு Johann David Wadephul கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.*

*இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக திரு ஜெய்சங்கர் கூறினார்.*

*சர்வதேச மற்றும் மண்டல விவகாரங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார்*

*தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஜெர்மனி முழுமையான ஆதரவு அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.*

*இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேலும் அதிகரிப்பது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.*

*உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது என்று ஜெர்மன் வெளியுறவு அமைச்சர் கூறினார்.*

*இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு ஜெர்மனி ஆவலுடன் உள்ளதாகவும் திரு Johann Davad Wadephul தெரிவித்தார்.*

*>><><><><<*

*அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு அடிபணியாமல் தங்கள் நாட்டிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்யும் இந்தியாவின் நிலைப்பாடு பாராட்டுதலுக்குரியது என்று ரஷ்யா கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு Sergey Lavrov இந்தோனேஷிய நாளேடுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.*

*தடையற்ற வர்த்தக கொள்கையை இந்தியா உறுதியான நிலைபாட்டை கொண்டிருப்பதை இது வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.*

*இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் திரு Sergey Lavrov தெரிவித்தார்.*

*>><><><><<*

*பஞ்சாபில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நாளை பார்வையிட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பஞ்சாபிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றார்.*

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றும் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறினார்.

>><><><><<

ஜம்மு கஷ்மீரில் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக Reasi மாவட்டத்திற்கு உட்பட்ட Salal அணையின் அனைத்து மதகுகள் வழியாகவும் நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக Chenab ஆற்றின் கரையோரப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு ஏதுவாக மீட்பு மற்றும் நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக ஜம்மு கஷ்மீர் அரசு கூறியுள்ளது.

இதற்கிடையே, இமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளிலும் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்திலும் நாளை தொடங்கி வரும் சனிக்கிழமை வரை அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>><><><><<

மகாராஷ்டிரா மாநிலத்தில் குடியிருப்பு வளாகம் இடிந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக அம்மாநில அரசின் தலைமைச் செயலர் மற்றும் காவல் துறை தலைவருக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பால்கர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் நேரிட்ட இந்த விபத்து குறித்து தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டதன் அடிப்படையில் தேசிய மனித உரிமை ஆணையம் இந்த நோட்டீசை அனுப்பியுள்ளது.

இரண்டு வார காலத்திற்கு இதற்கு பதிலளிக்குமாறும் அதில் கோரப்பட்டுள்ளது.

>><><><><<

சத்தீஷ்கரின் மின்உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

ராய்ப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய், 25 ஆண்டுகளுக்கு முன்னர் மாநிலத்தின் மின்உற்பத்தி ஆயிரத்து 400 மெகாவாட் அளவுக்கு மட்டுமே இருந்ததாக கூறினார்

தற்போது 30 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு மின்உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் பங்களிப்போடு மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே மின்உற்பத்தியின் உயர்வுக்கு காரணம் என்றும் திரு விஷ்ணு தியோ சாய் கூறினார்.

>><><><><<

தாய்லாந்து நாடாளுமன்றத்தின் கீழவையை கலைப்பதற்கு இடைக்கால அரசு பரிந்துரைத்துள்ளதாக பிரதமர் பொறுப்பு வகிக்கும் திரு Phumtham Wechayachai அறிவித்துள்ளார்.

*தாய்லாந்து நாடாளுமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இடைக்கால அரசின் பரிந்துரை மன்னரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.*

*>><><><><<*

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

*கஸகஸ்தானின், Almaty-ல் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Swastika Ghosh பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 11-5, 11-8 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் Sophia Klee -ஐ வென்றார்.*

--------------

*ஆசியக்கோப்பை ஹாக்கிப்போட்டியின் சூப்பர் நான்கு சுற்றில் இந்தியா இன்று கொரியாவை எதிர்கொள்கிறது.*

*பீஹாரின் Rajgir ல் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

-----------

*சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-17. 13-21, 22-20 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Wang Yu Si-ஐ வென்றார்.*

*>> End of News <<*